**அ.வ.எண். 244/2023**

**நாள் – 13.02.2025**

**3ம் பிரதிவாதி – திருமலைக்குமார் – த/பெ. மாடசாமி**

**கட்டளை 10ன் கீழ் பதிவு செய்யும் 3ம்பிரதிவாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. நான் சிவனுப்பாண்டியன் என்பவரிடம் 8 சென்ட் கிரையம் பெற்றேன்.

2. சர்வே.631/12ல் மொத்தம் 52 சென்ட் விஸ்தீரணம் இடம் உள்ளது. அதில் கீழ்பக்கம் 8 சென்ட் கிரையம் நான் பெற்றுள்ளேன். வாதி 8 சென்ட் கிரையம் பெற்றுள்ளார். 2ம் பிரதிவாதி கண்ணனுக்கு வாதி இடத்தின் மேற்கே 8 சென்ட் இடம் உள்ளது. வள்ளிமுருகன் மற்றும் ஆறுமுகத்திற்கு சர்வே எண்.631/12ல் இடம் கிடையாது. என் இடத்திற்கு கீழ் பக்கம் வள்ளிமுருகன் மற்றும் ஆறுமுகத்திற்கு இடம் உள்ளது. சர்வே எண்.631/12ல் உள்ள மீதமுள்ள 28 சென்ட் யார் வசம் உள்ளது என்று தெரியாது. எனக்கு 8 சென்ட் அளந்து சரிகட்டினேன். வாதி அவருக்குரிய 8 சென்ட் இடத்தை அளந்து சரிகட்டிக்கொண்டார். 1ம் பிரதிவாதி ஆறுமுகம் தான் அளந்து பார்க்கவில்லை.

3. எனது 8 சென்ட் முடிந்து அடுத்த மேற்கில் வாதி இடம் உள்ளது. எனது 8 சென்டை தவிர்த்து வாதியின் 8 சென்ட் இடத்தில் நான் எந்த பங்கும் கோரவில்லை. எனக்கு 8 சென்டை விட்டுவிட்டு வாதிக்கு பாத்தியப்பட்ட 8 சென்ட் இடத்தை அளந்து கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி